உ

சிவமயம்.

கோவிலூர் ஆதீனம்

சிதம்பரம்.

# ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள்

# சரித்திரம்.

இது

ஷை சுவாமிகள் மாணாக்கரில் ஒருவராகிய

குஞ்சிதபாதசுவாமிகள் செய்த

வசனநடைக்கிணங்க

ஷை ஆதீனம் கண்டனூர்

நா. பெ. நா. மு. முத்துராமய்யா இயற்றிய

## நேரிசை ஆசிரியப்பா.

ஷை சுவாமிகள் மாணாக்கர்களில் கார்வார்

வீரப்பசுவாமிகள், சேவுகய்யா

இவ்விருவர்கள் விருப்பத்தின்படி

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிடப்பெற்றது.

1910.

உ

சிவமயம்.

# ஸ்ரீபொன்னம்பல சுவாமிகள் சரித்திரம்.

## கற்பகவிநாயகர் துதி.

---

நெடியவெழு பவக்கடலை யுழக்கிவினைக் கிரிநூறி
நீங்கா தோங்குங்
கொடியகுணம் புலன்கரண முதலான பகைப்படையைக்
குலைய மோதிப்
படியவர்தங் கருத்தனிருட் குழக்கத் திலிக்கக் கருணைமத
வாறு பாயும்
படிபுகழுந் தில்லைவனக் கற்பகக்குஞ் சரத்திருதாள்
பணிதல் செய்வாம். (க)

## சுப்பிரமணியர் துதி.

கரண வாதனை கழன்றினி தேகச்
சிரவண மன்னஞ் சிந்தையிற் கொள்ளப்
பிரணவ மதனைப் பெருமா னுக்கருள்
சரவண பவனற் றாளிணை பணிவாம். (உ)

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: 436846)

## நடராஜர் துதி.

காயமுட னுயிர்முயலுங் கருமத்தா லளவில்லாக்
காயம் பெற்று
மாயைமய மாமுலகின் மயங்காமல் வாஞோரும்
வணங்க லுற்ற
கோயிலெனுந் தலமதனிற் குஞ்சிதபா தப்பெருமான்
கோலங் கண்டு
வாயினுற் றுதித்திறைஞ்சி மனதினுற் றியானித்து
வணக்கஞ் செய்வாம். (௩)

## தத்துவராயசுவாமிகள் துதி.

சத்துச்சித் தானந்தந் தனிற்றேன்று முலகமெலாஞ்
சத்திதன் றேதும்
அத்துவித மேயுணர்ந் துலகோர்க ளுய்யும்வண்
மவத ரித்தே
வித்துவத்தின் றிறமையிலா நான்முகமா வெளியாக்கி
விளங்கச் செய்த
தத்துவரா யுப்பெருமான் றாளிணையை யெப்போதுந்
தலைமேற் கொள்வாம். (௪)

## குருபரம்பரை.

வேதமுடி வானபரம் பொருண்முத்து ராமனென
வேடம் பூண்டு

பூதலத்தி லெழுந்தருள்ப் போற்றியவ னருளையே
புனைந்து மேவுஞ்
சீதமுள சிதம்பரசற் குருவருள்பொன் னம்பலதே
சிகன்றா ளான்
பாததா மரைமலரைப் பலகாலும் வாழ்த்தியே
பணிந்து வாழ்வாம். (௫)

## முத்துராமலிங்கசுவாமிகள் துதி.

அவனவ ளதுவென் றாகிய சகத்தி
னடக்கமும் விரிவையு முணராப்
புவனமீ துள்ள வடியர்கட் கெல்லாம்
பொலிவுறு மறையதன் பொருளை
நிவமுறு முள்ளங் கைநெல்லிக் கனிபோல்
நிகழ்த்திடக் கழநியம் பதியிற்
சிவமென வெழுந்த முத்துரா மேச
தேசிகன் றிருவடி பணிவாம். (௬)

## துறவுசுவாமிகள் துதி.

பூதலத்திற் பிறந்திறவாப் பொலிவான் பதம்பெறுக
ஆதரவுற் றருள்முத்து ராமய்ய னடிபுனைந்து
சாதகமாந் துறவுற்றுத் தத்துவஞா னம்பெற்றுப்
போதனையே புரியருணு சலகுரவன் புகழ்போற்றி. (௭)

## சிதம்பரசுவாமிகள் துதி

எல்லை யில்லா வடியார்க
ளிருதயத்துக் கேற்றவடி
வல்லைப் பொன்னம் பலகுரவன்
வணங்குதற்கு வந்தவடி
தொல்லை நீங்க வடியார்கள்
துதித்துப்பாடுந் தூரியவடி
தில்லைத் தலத்திற் சிதம்பரதே
சிகனுருடைய சிறந்தவடி. (அ)

## நாகலிங்கசுவாமிகள் துதி.

தேவர்கள் புகழுங் கண்ட
னூரினிற் சிறக்க வாழ்ந்து
மேவுநல் லடியார் கூட
விருப்புட னெனக்க ளித்த
பாவல னான நாக
லிங்கனும் பரம யோகி
தாவுநற் கமல பாதந்
தனைநிதந் தொழுதல் செய்வாம். (கூ)

## பொன்னம்பலசுவாமிகள் துதி.

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
உன்ன வந்தடி யார்கட் குவந்துமே
பின்ன மில்லாப் பிரமநீ யென்றருள்
மன்னு பொன்னம் பலனடி வாழ்த்துவாம். (கo)

## அவையடக்கம்.

தவமு ளோர்கள் புகழுஞ் சிதம்பர
　　தலத்தின் மேவுபொன் னம்பல சுவாமிகள்
நவம தான சரித்திரந் தன்னையும்
　　ஞானம் பெற்றருள் குஞ்சித பாதரால்
திவர்த லாக வசன நடையினில்
　　நிகழ்த்த லானதை நேரிசைப் பாவினாற்
கவர்வு றும்படி செய்திட லாலல
　　கோர்க ளங்கீ கரித்திட வேண்டுமால். (கக)

சிவமயம்.

# ஸ்ரீபொன்னம்பல சுவாமிகள் சரித்திரம்.

## நேரிசை யாசிரியப்பா.

---

சீருறுங் கயிலைத் தென்பா ரிசத்தில்
ஏருறும் பரத கண்டத் திலங்குறுந்
திசையெலாம் பரவுந் திகழ்வட நாட்டில்
விசயமா நகர மேவிய தவத்தால்
விதரணை யுள்ள வேளாளர் குலத்தி
லுதயமே யாக் யுலகெலாம் போற்றப்
பொன்னம் பலமா மெனப்பெயர் புனைந்து
நன்னய மான் துறைதனி னடந்து
பாலிய வயதிற் பண்புள் சற்குணம்
வேலியாய்ச் சூழ விளங்கி வதியுநாள்
அங்கம் மாளெனு மன்புறு தாயுந்
துங்கமாந் தயிலந் தோய்தரக் கொடுக்க
வுடனே வாங்கி யுள்ளத்தி லன்புடன்
றடாகதீ ரத்திற் சார்கண பதிக்குச்
சாத்தியும் புஷ்ப சந்தன திகளை

நேர்த்தியா யணிந்து நின்றுமே பணிந்து
வருவதை யோர்நாள் மாதா மறைந்துநின்
றுரிமையாய்ப் பார்த்துக் கடுமையாய்ப் பேச
வாண்டு பதினா றாகிய தானதா
லீண்டுநா மினிமே லிருப்ப தடாதெனக்
கானவர் வலைபிற் கைதப்பி யோடு
மானெனக் கிளம்பி வளம்பல வுற்றுக்
குலவுநற் பதியாங் கோயிலென் றுரைக்கும்
நலமலி வுற்ற ஞானிகள் சூழும்
பொன்னம் பலமாம் புலியூர் பருவி
யின்னம் பிறவா முத்தியெய் துதற்கே
யதிதி விரமாம் பக்குவ மமையச்
சதிருள வெண்ணந் தானுமுண் டாகச்
சற்குரு தன்னைச் சடுதியி லடைந்தே
விற்பன னாக வேண்டுமென் றெண்ணிப்
பெத்தாச்சி யடிகள் பிரியமாய்க் கொள்ளுறப்
பத்தர்கட் கொப்பாய்ப் பணிவிடை யியற்றி
யவர்களாற் சந்நி யாசமும் பெற்றுப்
பவமது நீங்கப் பத்திவை ராக்கியங்
கொண்டுமே பிக்ஷை காடிகூ ழேனுங்
கண்டதை வாங்கிக் கனிவுட னுண்டு
பதஞ்சலி வியாக்கிர பாதருக் கன்பா
யிதந்தரு நடனங் காட்டிய விறையைக்

காலந் தோறுங் கருத்தினி லுன்னிச்
சீலமாங் குணங்கள் சிறப்புட னெய்தே
யின்புடன் சென்றே யேத்தித் துதித்து
மனதிற் றியான மருவியும் வைகுநாள்
வேதாந் தத்தின் விருப்பமுண் டான
சாதன சதுட்டய சம்பன்ன ராதலால்
கோவி லூரிற் குணங்குறி கடந்த
நாவலன் முத்து ராமலிங் கேச
னருளினைப் பெற்ற வற்புதத் தோன்றல்
தெருளுரு வான சிதம்பர தேசிகன்
சிதம்ர பேக்ஷத்திரந் தெரிசன நிமித்த
மிதமா வடியார்கள் சூழவந் திருக்கக்
கால நோக்கும் பெதகாசி யடிகளுஞ்
சீலமாய்த் தெரிசன நிமித்தஞ் சென்றதிற்
* கருணா நிதியைக் கண்டு களிப்புட
னுரிமையா யவர்தங் குணங்களை யுரைத்துப்
படிக்கச் சிறந்த பக்குவ முள்ளவ
ரடியரிற் சேர்த்தே யனுக்கிர கஞ்செய
வேண்டுமென் றுரைக்க விருப்புடன் கொண்டே
யாண்டகு மடியா ருடன்கலந் திருமென
வாத்த மங்க மழகிய தானஞ்

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE

---

* கருணாநிதி - மேலேகூறிய சிதம்பரதேசிகர்.

சாத்திக மாஞ்சற் பாவப் பணிவிடை
கால நோக்கிக் கருத்துறச் செய்யுங்
கோலமா நடையைக் குறிப்புடன் பார்த்தே
யுரிமையாய்ச் சசிவன்ன் போதமுன் னுரைக்கப்
பரிவுடன் பாடம் படித்தநர் சீரய்வதை
ஆசா ரியரு மகமகிழ் கூர்ந்து
பாசம் தகலப் படிக்க வேண் டியவதை
வாசிட்டம் வரையில் வனப்புட னுரைக்கப்
பூசித் துணர்ந்து போத மிகவுறக்
கோவி லூரிற் படிக்குங் குழாங்களுள்
நாவிற் சிறந்தவ ரென்றே நயந்து
பொன்னம் பலய்பா வென்றே புகன்று
சொன்னய மாக வழைக்கத் தொடங்கியும்
சீடர்கட் கெல்லாந் தினமிரண் டர்வது
பாடஞ் சொல்லப் பணித்துமே கருணை
நிதியு மடியவர் கூட்டத் துடனே
பதியா மதுரைப் பணிநிமித் தமதாய்த்
திருவா வடுதுறை சென்றுமே தங்கி
மருளிரி சுப்பிர மணியதே சிகரைக்
கண்டுமே வந்த காரியங் கழற
விண்டிடும் படியாய் வேதாந் தத்தி
னருத்தங் கேட்க வவாவுற்ற துண்டெனக்

கருணை நிதியுங் கருத்தினி லுன்ன
முத்திக்கு வித்தா முதற்பிரம கீதை
யத்தியாய மூன்றி லருளிய கவிக்கு
விரிவாய் வடமொழி வியாக்கியா னப்படி
பரிவுடன் கூறத் தேசிகர் பண்புடன்
வந்தகா ரியத்தை வகையுடன் முடிக்கச்
சந்தோ ஷமதாய்ச் சடிதியில் வந்திடச்
சீலப் பிரம கீதைச்செந் தமிழ்க்குக்
கோலமா மவுதா ரிகையுமே கூறி
யரும்பதங் கட்கே யுருத்தமும் விளங்கத்
தெருள்வியாக் யான சாரமாய்ச் செய்கவென்
றாசா ரியரு மன்புடன் கூறச்
செய்துமே பின்னுந் தெளிவுற வடியர்க
ளுய்யும் படிக்குல குபகா ரமதாய்ச்
சமஸ்கிருத நூல்கள் சவிஸ்தார மாக
விமலியி னருளால் விளங்கிடப் படித்து
வரவே காசியை மனந்தனி லுன்னக்
குருநா தனுமிவர் கொள்கையை நோக்கி
நினைத்த படிநீர் யாத்திரை நினைவை
வினைப்படி முடித்து விரைவில் வருகவென்
றன்புடன் கண்ணீ ரரும்ப வனுமதி
யின்புடன் பெற்றே யெழிலடி யாருடன்

காசிமா நகரங் கடிதினிற் சென்று
வாசமாய்க் கங்கை யாடியு மருவிய
விசுவே சுரரையும் விந்துமா தவரையுஞ்
சுசியா மன்ன பூரணித் தாயையும்
பேத மின்றிப் பிறப்பிறப் பகற்றும்
பாதம் போற்றிப் பரவச மாகித்
தெரிசனஞ் செய்தே யம்மை திருநுதற்
பரிவுடன் பற்றப் பாங்குள சந்தன
வுருண்டையைக் குறிப்புற் றுவப்புட னெறியப்
பெற்றுமே யம்மைப் பிரியமாய்த் தோன்ற
வுற்றதை நோக்கி யுவப்பதுண் டாகப்
பரிவுடன் பெற்றுப் பாங்குடன் விளங்கி
நிச்சல தாஸ ரென்னுமோர் நிபுண
னிச்சக முய்ய விந்துஸ் தானியில்
விசார சாகரப் பெயர்புனை நூல்தனை
யுசாவுதற் குரிய வுத்தம கிருஷ்ண
சுவாமிக ளிடத்திற் சுகமதாய்க் கேட்டு
நவமதாய் முடித்து நாடுதற் குரிய
குருதரி சனத்திற் கொண்டது நெஞ்ச
மருமையா யனுப்ப வேண்டுமென் றருள
விருத்திப் பிரபா கரமெனு நூலு
மிருபத் தேழு லட்சங் கிரந்தம்

வாங்கி யுட்கொடு வரைந்த தூதலால்
நீங்கா துணைர நிகழ்ந்திடு மூமக்கே
யென்று கொடுத்தே யியல்புட னனுப்பப்
பட்டணம் வந்தவ் வாராய்ச் சியினுட
னிட்டமாம் பஞ்ச தசப்பிர கரணஞ்
சீராய்ப் பிழையறத் திருத்தஞ் செய்துமே
யார்வுற வெழுதி யச்சிற் பதித்துக்
கோவிலூர் வந்து குருநா தன்றனை
நாவினாற் றுதித்து வணங்கியு நண்புறத்
தகைமையாங் கொற்ற வாளீ சுரருடன்
றிருநெல்லைத் தாயா ராகிய தேவிக்
கருமையாய்க் கும்பாபி டேகமு மன்பாய்ச்
செய்து சிவகதி சேர்ந்திடு கால
முய்திடச் சமாதி யுரிமையாய் வைத்தே
யரஹர வென்றங் கடியவர் போற்றத்
திரமதாய்க் கிரியைகள் செய்து முடித்துத்
தரமதா மிராம சுவாமிக டமக்குப்
பரவுதற் குரிய பட்டம் புனைந்து
சிக்கல் க்ஷேத்திரஞ் சென்றிட நினைக்க
வக்கண மடிய ரருளுப சரிப்பொடு
சென்றங் கிருந்து திருமழ பாடியி
லென்று மிருப்போ மென்றுநன் றெண்ண

வாவிச்சி யய்யா மடமதுண் டாக்க
நாவினல் ரூபா பதினை யாயிரந்
தருகுவே னென்னச் சரியெனக் கொள்ள
வருமையா முடம்பிற் சுரம்விட் டனுப்பி
திருநட ராஜர் தீக்ஷிதர் வடிவா
யுருவுட னுவந்தெ குஞ்சித பாதச்
சுவடும் விபூதியுங் கொடுத்துத் தரிக்க
நவமுள சுரமு நாடா தகன்றிடச்
சிதம்பர க்ஷேத்திரஞ் சிந்தையி லுன்ன
விதமுள வடியர்கள் யாவரு மிசைய
வுடனே வந்து யாவரு மொளிபெற
மடமதுங் கட்டி மகான்களு மடியரும்
விரிவாய் வரவே மிகவுமின் புற்றே
யுரிமையா யன்னந் தாசுட னுவந்துறச்
செய்துவே தாந்த சாஸ்திர சிரவண
முப்பிட வருளி யுயர்வாய் விளங்குந்
தமிழ்வே தாந்த சூத்திர மெனத்தகுங்
கமழ்கை வல்யுக் கருத்ததை யுணரா
வுரையது மெழுதி யுலகிற் பாவியு
புரையது நீங்கிப் பொலிவாய் விளங்க
விருத்திப்பிர பாகர விசார சாகரத்
தருத்த சமஸ்கா ரங் களு மமைபத்

தத்து வார்த்த தீபமாய்ச் சாற்று
முத்தம மான வுரையது மெழுதக்
கூடிய புதல்வ னாரெனக் குறித்து
நாடிய வுடனே *யிராமானு சன்ருன்
சீடனாய் வந்து சிறப்புட னிற்கப்
பாடலைச் சொல்லி யெழுதெனப் பார்த்தே
யேடது வெல்லா மெழுதுதற் குரியனென்
றெழுதத் தான்சொலி யெழுதிய தானபின்
பழுதிலா தச்சிற் பதிப்பித் துடனே
பகவத் கீதைக் குரையதும் பலவாய்
வகையி லாய விருப்பதை மாற்றச்
சங்கரா சாரிய சுவாமிகள் தயவா
யெங்கும் விளங்கச் செய்தபா ஷியமும்
மற்று முள்ள வியாக்கியா னங்களு
முற்றுப் பார்த்தே யுரையது மெழுதிக்
கோமள மான கூடார்த்த தீபிகை
நாமம் புனைந்து நவின்றதன் பின்னர்
வேதாந்த சூடா மணிக்கு விளக்கமாய்ச்
சாதா ரணமா யுரையதுஞ் சாற்றி
மறைபொருள் விளக்க மாமென வைத்துக்
குறைவிலாச் செல்வ வணிகரைக் கொண்டு
மடத்துக்கான சொத்தும் பலவகை

* இராமாநுஜன் என்பவர்தான் குஞ்சிதபாதர்.

திடமாய் வாங்கி நடக்கச் செய்தும்
விந்தையாய் வேதம் விளம்புறு சாலைகள்
நந்தன வனங்கள் நடத்திடச் செய்தும்
பேணு ரீணுக் காணு விலாசத்
தானு ரான சதுருள சின்னய்யா
வணிகனைக் கொண்டு வணங்குதற் குரிய
பணிதெரி யாமற் றார்ந்து பரவிப
விளமை யாக்கினர் கோவிற் றிருப்பணி
வளமி லாமற் சீரண மானதை
யுயர்த்திக் கல்லா லொளிபெறச் செய்துந்
துயர்தீ ரெவ்வன தீர்த்தந் தூர்ந்ததைச்
சேறதை யெடுத்துத் தெளிவுறச் செய்தும்
பாறைக் கல்லாற் பண்புடன் முடித்தும்
வேதமோ துதற்கு விருப்புடன் சாலை
நாதன் கோவி லருகி னடாத்தியு
மாலையந் தன்னிற் பூசையு மன்புடன்
காலந் தோறுங் கணக்குடன் நடாத்தியுங்
குருஸ்தா வமதாங் கோவிலூர் சென்று
விருப்பமாய்ப் பட்ட மேவியங் கிருந்து
சதுராய் விளங்கு மிராமநற் சுவாமிகள்
பதியைவிட் டுயர்வாம் பதமதை யடைய
வவ்விட மிருந்தே யதற்குரித் தான

திப்விய மான கிரியைகள் செய்துந்
தான மேவச் சதுருள சற்குண
சான வீரப்ப ஞானதே சிகனை
யிருந்திடச் செய்தே யியல்பா யுரைத்தும்
பொருந்திய வடியார் பூஜித் துவக்கச்
செய்துமே வந்து சிதம்பர மேவித்
தெய்திய விருத்தா சலத்திற்கு மத்தியி
லிறும்பூ தூர்தனி லின்புற முன்னாள்
சுறும்போர்த் தத்துவ ராயசு வாமிக
ளனுக்கிரக நிமித்த மவ்விடந் தங்கத்
தனுவாஞ் சரீர நீங்கிடச் சமாதி
யடியர்க ளாலே யன்புடன் வைத்துப்
படிமீ தமைத்த பணியது தானுஞ்
சீரண மாகிச் சிதைந்திருந் ததனைப்
பூரண மனதுடன் பூசைசெய் கின்ற
வடியா ரிடத்திலவ் வாலய மதனைத்
துடியா மொழிப்பொன் னம்பல சுவாமிகள்
கட்டுவா ரென்னக் கனவது தோன்றச்
சிட்டர்கள் வாழுந் தில்லையம் பலத்திற்
கப்பவே வந்தங் கடிதொழு தான
சொப்பனந் தன்னைச் சொல்லச் சுவாமிகள்
விற்பன்ன ரான சுவாமிகள் விநோதமாஞ்

சொற்சுவை பொருட்சுவை தோன்ற வமைத்துக்
கற்பனை வைத்துக் காட்டிப் பாடிய
சாத்திர முணர்ந்த சந்தோ டத்தால்
நேர்த்தியாய்க் கட்டுவோ மென்ன நினைத்தே
யிரும்பூ தூர்சென் றிருந்துள சமாதி
நறும்புறப் பார்த்து வந்தநா ளதனிற்
றிப்பிய மான சிறுவயற் செனித்த
சுப்பிர மணிய சுசீலனும் வணிகன்
வந்துமே வணங்கி வாய்பொத்தி நிற்கச்
சந்தோ டமதாய்ச் சுவாமிகள் நோக்கித்
தத்துவ ராய சுவாமிகள் சமாதி
யித்தன் மைத்தென் றெடுத்துமே சொல்லு
வென்னாற் கூடிய வரையும் பொருளினி
யுன்னு தனுப்புவே னென்ன வுரைத்துச்
சென்றுமே பொருளுஞ் சீக்கிர மனுப்ப
நன்றென வாங்கி நல்லநாட் பார்த்துக்
கருப்பக் கிருக முதலிய பணிகள்
விருப்பமாய்ச் செய்து மேலோர் புகழக்
கும்பாபி டேகங் குணமாய் நடத்தி
யும்பர்கள் போற்றச் சம்புவுக் கேற்ற
வைதிக பூஜை வளமாய் நடத்த

வுய்திட வுற்சவ மூர்த்தியும் வார்த்தே
யாடி மாதத் தபரபக் கந்தனில்
நாடிய சதப நட்சத் திரமதிற்
குருபூ ஜையதுங் கோமள மாக
வருமையாய் நடத்தி யன்றிராத் திரியிற்
செவ்விய மூர்த்தித் திருவோ லக்கமுந்
திவ்விய மாக நடத்தித் திருக்குளம்
நந்தன் வனமக் கிராமமு நடத்திச்
செந்தமி ழோதத் திருமடங் கட்டி
வளர்பிறை போன்று வயங்குமத் தலத்திற்
சத்துக்க ளிருந்து சகலமு நடத்தச்
சொத்துக்கள் வாங்கிச் சுகமாய் நடக்க
நிலத்தில் வழக்கதோ வந்தது நீங்க
விலக்கக் கூடிய கோர்ட்டில்விண் ணப்பங்
கொடுக்கவே ராம கிருஷ்ண பிள்ளையுந்
துடுக்காம் வழக்கைத் துலைக்கவந் திட்டபோ
தன்புள சரீரத் தடுத்ததோர் வியாதிக்
கின்புடன் சுவாமியோர் கனியதை யீய
வாங்கிப் புசிக்க வியாதியு மாண்டிடத்
தீங்கது நீங்கும் வேலையைச் செய்க
வின்பா வத்தா யேர்ப்படத் தீர்ப்புந்
தனதாய் நடத்தச் சாத்திய மான
பொழுதினிற் சுப்பிர மணியப்பூ பாலன்

றெழுது வணங்கித் தோத்திரஞ் செய்யப்
பந்த நீங்கப் பணங்காய்க் கும்மரம்
வந்ததா வென்று வாக்கினாற் கூறக்
கண்ணிலுண் டான நோய்தனைக் காட்டப்
புண்ணிய மூர்த்தி பூதியாற் றடவச்
சாந்த மாகிச் சகசமாய் விளங்கத்
தீர்ந்த மகிமையைச் செப்புதற் கெளிதோ
வண்ணலைப் போல வநுக்கிர கஞ்செய்வோன்
கண்ணிமை போல வடியரைக் காப்போ
னன்ன தான மடிக்கடி யுவந்து
நன்னய மாக நாடொறும் புரிவோன்
பொறையிற் றரும பூபதிக் கொப்போன்
நிறைகுண மதனி விராமனுக் கொப்போன்
வசிட்டரைப் போல வாக்கிய மருள்வோன்
ததீசியைப் போலக் கொடைதனைச் சார்வோன்
வித்தையில் வேத வியாசருக் கொப்போன்
தத்துவ ஞானஞ் சனகனுக் கொப்போன்
நாரதன் போற்சிவ பத்தியை நயந்தோன்
தீரமாஞ் சுகர்போற் றுறவிற் றெளிவுளோ
னீசான் றிருவடிப் பூஜை யனுதினம்
நேசமாய்ச் செய்து தீவினை நீங்கினோன்
நடன தெரிசன நாடொறுஞ் செய்து
தொடர்புறும் வாசனை தோன்று தகற்றினோன்

சாதன நிறைந்த தவமுளோர்க் கெல்லாம்
பேதமி னீயே பிரமமென் றருள்வோன்
பூரண வடிவப் புண்ணிய சிகாமணி
யாரண மறியா வகோசர சொரூபன்
தனதுரு வதனைச் சகசமாய்ப் பெற்றோன்
கனவினுங் கடுஞ்சொற் கழறுவ தில்லோன்
சத்துவ மிராசதந் தமோகுண மிலதாம்
வத்துநின் ணயமே மனதினி லுடையோன்
சிவகா ருணியஞ் சிறந்திடு பத்தி
மேவிய ஞான விராகம துடையோன்
நீற்றொடு கண்டிகை நிறையப் பூண்போர்
போற்றி வணங்கும் புண்ணிய புருட
னவநெறி யான தனைத்துங் களைந்து
தவநெறி விளக்குந் தத்துவ சொரூபன்
பாலிய முதலாப் பகரும்வே தாந்தத்
தோவிடும் வாதனை யொழியவே றில்லோன்
போந்த பூமி போலப் பொறுமையன்
சாந்த சமுத்திர தருமமா ணிக்கந்
தேக சௌக்கிய மில்லா திருந்தே
யாகப் பிரக்ஞை மாறிய தந்நாள்
கண்மணி போலக் கருத்தினிற் கொண்டு
வண்மைசா லன்பு வைத்திருக் கின்ற

தெள்ளிமை வீரஞா னேசதே சிகன்று
னுள்ளமெந் நிலைமை யுடைத்தென வென்ன
* "யாதுமென்," றோதுங் கவியினை நவிலக்
காதலுற் றய்யன் கருத்திற் கனிந்து
பட்டத் தமர்வ தாரெனப் பார்த்துத்
திட்டம தாகச் சிதம்பர சுவாமியென்
றுன்னிய பின்ன ருயர்வுள சுவாமிகள்
மன்னிய சாலி வாகன சகாப்த
மாயிரத் தெண்ணூற் றிருபத் தெட்டினிற்
றேய்வுறு குரோதி வருடந் துலாமதி
யிருபத் திரண்டாந் தெய்திக் கிசைந்த
திருவாதி வாரஞ் சித்திரைநட் சத்திரம்
பகலெந் தரைமணிப் பண்புள தினத்தில்
புகல்வதற் கரிய புண்ணிய மூர்த்தி
பிரிவதைப் பார்த்துப் பிங்கலன் றுனு
முரியதா னத்திற் சகிக்கா தொழிவுற
மையிலாப் பூவி னுற்றம்வா னுறல்போ
லய்யன தறிவு மகண்டவி யாபக

---

*யாது மென்று மெவ்விடத்து மிறத்தல் பிறத்த விலதாகு, மோதும் விவர்த்த ரூபத்தா லுலகாய்ப் பிரமமேவளரு,மாத லாலிவ் வுலகெல்லா மடியு முடியு நடுவுமறப், பேத மறப்பா வாபாவம் பிற வாப் பொருளென் றிடர்தீர்வாய்"

சச்சிதா நந்த சதாசுக நித்திய
சொச்சவத் துவித சுகபரி பூரண
மானதக் காலமந் நாடுக ளெல்லாம்
வானத் திருந்து மழையது பொழிந்தே
யோடையும் பொய்கையு முவப்புறு தடாகமும்
பூடுக ளெல்லாம் பொலிந்து விளங்க
மன்னுயிர்க் கெல்லாம் வரம்பில போகந்
துன்னுற மலிந்து தோன்றின தெல்லாம்
பெரியோர் சமாதி பேணிடி லதற்காங்
குரியனவிவையென் றுணர்ந்திட மாதோ,

முற்றிற்று.

## ஸ்ரீபொன்னம்பல சுவாமிகள்.

### பரிபூரணவாழ்த்து.

பார்மேவு பாண்டிநன் னாட்டிற் சிறந்தசிவ
பத்தர்சூழ் கோவி லூரிற்
பண்பான வணிகர்செய் பாக்கியத் தாலவர்கள்
பாசமது நீங்க வேண்டிப்
பாவிக்க வருமுத்து ராமலிங் கய்யனருள்
பரிவுடன் பெற்று மந்தப்
பதிதனி லிருந்தருள் சிதம்பர தேசிகன்
பாதார விந்த மதனைச்
சீர்மேவு தில்லையம் பதிதனின் மடமொன்று
செய்ததிற் றூபித் துமே
சிறப்பான பூசைக ணடத்தியருள் பெற்றதோர்
திவ்யகுண ஜீவன் முத்தன்
தேர்வுதரு மத்துவித போதனு சத்தியிற்
சிரேஷ்டசன் மார்க்க சீலன்
செகமெலாம் புகழ்பக வத்கீதை யுரையதுந்
திரிபுகல வேசெய் துளோன்
தார்மேவு தாண்டவ னுரைத்தகை வல்லியுச்
சார்புறிந் துரைசாற் றினேன்

சந்தேக விபரீத வஞ்ஞான வனமதைத்
தகிக்கின்ற ஞான தபனன்
ஸமஸ்கிருத முதலான பாஷையடி யார்க்கெலாஞ்
சடிதியி லுணர்த்த வேண்டிச்
சாந்தமே வடிவா யெழுந்தபொன் னம்பல
சுவாமிகள் சரீரம் விட்டு
ஏர்மேவு மாயிரத் தெண்பதாண் டிற்குரோதி
வருடமாந் துலாமதி யினில்
எழில்தேதி யிருபத் திரண்டாஞ் சதுர்த்தசி
யிலங்குநல் லாதி வாரம்
இயல்பான சித்திரையின் மேடலக் கினமார்ந்
திருக்கின்ற சுபதி னத்தில்
எங்கும் புகழ்ந்திட விதேகமுத் திப்பத
மெய்தினன் வாழி மாதோ.

---

## ஆண்டவுரவுர்கள் பரிபூரணகாலத்து யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுகநாவலரவர்களியற்றியது.

---

சீர்கொண்ட சகவருட மாயிரத் தெழுநூறு
சேருமறு பத்தொன்பதிற்

திருமருவு பிலவங்க வருடமதின் மீனமாந்
திங்களெட் டாந்தேதியிற்
றிரமருவு பானுவா ரத்தினுத் திரமெனச்
செப்புநக் ஷத்திரத்திற்
சிறந்த்பூ ர்ணியெனுந் திதியதனி லினிதுவரு
திகழ்கன்னி லக்கினத்தே
கார்கொண்ட புயல்வண்ணன் மலரயன் வருந்தியுங்
காணாத பெருவாழ்வெனுங்
கறைமிடற் றிறைராச கட்கபர மேசுரன்
கருணையுரு வோடமர்ந்து
கனவெழில்கொண் மணிமாட நிலவுசமி வனமெனக்
கழறுமுயர் பதியில்வாசன்
கணிதமறு சீடர்தம் தகவிரு டெரத்தவரு
கருதரிய ஞானதபனன்
போர்கொண்ட காமக்கு ரோதலோ பாதியாம்
புகல்குற்ற நீங்குபுனிதன்
பொறையறி வடக்கமருண் முதலநற் குணமொடு
பொருந்திவள ருற்றமுதல்வன்
புவன்மூன் றினுமிவன் புகழ்சென் றிடற்கிடம்
போதா தெனச்சிறந்தோன்
பொருவிலா துயர்சுத்த வேதாந்த சாஸ்திரம்
போதமிக் குள்ளநிபுணன்
பேர்கொண்ட நிர்மல சமாதிசா க்ஷாத்கார
பிரதாப மிகுசிரேஷ்டன்

பெருமைநிறை தருமுத்து ராமலிங் கக்குரு
 பிறங்கியிடு மத்துவிதநிட்
பிரபஞ்ச நிர்விஷய நிஷ்களா தீதமாம்
 பெருவெளிய தாகிநின்ற
பேசரு மகண்டபரி பூரண சுகானந்த
 பிரமமா யிலகினுனே

---

## பெரியதுறவுசுவாமிகள் பரிபூரணகாலத்து சுப்பராயசுவாமிகளியற்றியது.

அரியகலி யுகவருட நாலாயி ரத்துத்தொ
 ளாயிரத் தைம்பதின்மே
லஞ்சாலி வாகன சகாப்தமோ ராயிர
 மடுத்தவெழு நூற்றெழுபதொன்
றுனசவு மியவருட மொடுதக்க ணயன
 மளப்புருங் கிரீஷ்மருதுவு
மங்கடக மதிதேதி யொன்பதொடு சுக்லபு
 க்ஷாதிவா ரத்தினிரவிற்
றருமமிர்த கடிகையிரு பத்தினுற் பூரநட்
 சத்திரந் திதிசதுர்த்தி
தனின்மிதுன லக்கினமதொடுவரி யானுடன்
 சார்வணிச வாகரணமுஞ்
சாற்றுமிவை சேர்சுப தினத்தினின் மணிக்கரைத்
 தண்கடற் றாசுடுத்த
தரைமகட் கொருதரள மாலைபுரை மதுநதித்
 தனிநடு மதாணியென்ன

மருவிவளர் தென்கழநி யம்பதியி னுப்பனெனிர்
மாணிக்க மெனவிளங்கும்
வரமுத்து ராமகுரு லிங்கத்தி லென்றாளு
மன்னுமொளி யாய்க்கலந்தான்
மகிமைதரு ரகுபதிக் கருளிருடி புங்கவ
வசிட்டர்போ தகசத்தியும்
மலர்பண்ணு டவியரக னேந்துமொரு பூச்சக்ர
வர்த்திசன கன்ஞானமும்
வரையரிய சடபரதர் சேவகா ருண்யமு
மன்னுசுகர் சந்நியாசமும்
வான்பரவு நாரத மகாமுனிவ ரேந்திரன்
மனதிலுறு சிவபத்தியும்
வாரித் திரட்டியோ ருருவுகொடு வந்தென்னை
வழிமுறைமை யடிமைகொண்ட
மாசிலருணுசல சதாசிவ சுகோதய
மகாகுரு சிகாமணியரோ.

---

## சின்னத்துறவுசுவாமிகள் பரிபூரணகாலத்து நாகலிங்கசுவாமிகளியற்றியது.

வயமிகுக் குரோதிசம் வச்சமிது னத்திலே
வளர்தேதி முப்ப தொன்று
மகாவபர பட்சமுந் துவாதசி ரோகணி
மாவெள்ளி தசக டிகையுஞ்
செயமிகு சிம்மலக் கினசுப தினத்திலே
சின்மயா னந்த கோடி

திகழுருவ மாய்வந்த முத்துராம குருசாமி
சீரடி வணங்கி நாளு
நயமிகுந் துறவியாய்ச் சவணுதி முழுதுமே
நன்னிலைமை யாயு ணர்ந்து
நன்மைபெறு ராமேஸ் பரங்காசி சென்றுமே
நற்றுரிய நிலையை நாடிச்
சுயமான சீவன்முத் திப்பதந் தன்னிலே
சுகியா யிருந்து நாளுந்
தூயவரு ணுசல சுவாமியும் விதேகச்
சுபாவம தடைந்த தன்றே.

---

## கருணாநிதியவர்கள் பரிபூரணகாலத்து கண்டனூர் நா. பெ. நா. மு. முத்துராமய்யா அவர்களியற்றியது.

திருமருவு மாயிரத் தைம்பதொன் ருமாண்டு
செறிதாது வருடத்தினிற்
றிகழ்சடக மாதமதி னுன்கான் தேதியுஞ்
செறியபர பட்சந்தனிற்
றினசோம வாரமே காதசி ரோகணி
திகழ்துலா லக்கினத்தே
தேவநக ரதனில்வந் தவதார மாகியே
தென்கழநி யம்பதியினிற்
குருநாத னுமுத்து ராமலிங் கேசனருள்
கொண்டுமே யடியவர்க்குக்

கூறுன வப்பதியி யிருந்துபி னனுக்ரகங்
குணமாக வருளுகின்றேன்

கோதிலரு ளுசல சுவாமிகட் கிளையநற்
குலமுடைய சூடாமணி

கொண்டலென வேபொழியு மண்டலத் துளவணிகர்
குழுவெலாம் பணியவல்லோன்

மருமருவு கொற்றவா ளீசனற் றிருநெல்லை
மாதுதன் கருணையாலே

மதிமன்னர் நிதிமன்னர் கவிமன்னர் புவிமன்னர்
வந்துபணி கின்றதீரன்

மங்களம தானமட் வாலய சிவாலயம்
மலர்வனஞ் சத்திரமுதல்

[illegible] டாகவே
வந்த [illegible]

ம[illegible] ஞன்குமே
[illegible]

மறிவான கல்விசெல் வம்பொறுமை கீர்த்தியை
யரவனுங் கூறமுடியா

வத்துவித நிச்சய சிதம்பர சுவாமியென்
ஞனந்த கருணநிதி

புகண்டபரி பூரண சதானந்த சிற்சொருப
மாகினன் வாழிமாதோ.

KOVILOOR MADALAYAM, KOVILOOR - 630 307 KARAIKUDI